# இந்தியன் வங்கி லாபம் ரூ.1,709 கோடி; நிர்வாக இயக்குனர் பத்மா சந்துரு பெருமிதம்



சென்னை, மே.29–

பொதுத் துறையைச் சேர்ந்த இந்தியன் வங்கி கடந்த மார்ச் மாதத்துடன் நிறைவடைந்த 3 மாத காலத்தில் வரிக்கு பிந்தைய தனிப்பட்ட லாபமாக ரூ.1,709 கோடியை ஈட்டி சாதனை படைத்துள்ளது என்று வங்கியின் மேலாண்மை இயக்குனரும், முதன்மை செயல் அலுவலருமான பத்மா சந்துரு பெருமையுடன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் கூறியிருப்பதாவது:

கடந்த 2020 மார்ச் மாதத்துடன் நிறைவடைந்த காலாண்டில் வங்கி ரூ.1,641 கோடி தனிப்பட்ட நிகர இழப்பை சந்தித்திருந்தது. இந்த நிலையில் 2021 ஜனவரி – மார்ச் காலாண்டில் வரிக்கு பிந்தைய நிகர லாபமாக வங்கி ரூ.1,709 கோடியை பெற்றுள்ளது.

கடந்த 2020–21 முழு நிதியாண்டில் வங்கி ஈட்டிய நிகர லாபம் ரூ.3,005 கோடியாக இருந்தது. அதே சமயம் 2019–20 நிதியாண்டில் வங்கிக்கு ரூ.4,643 கோடி அளவுக்கு இழப்பு ஏற்பட்டது.

கடந்த ஜனவரி – மார்ச் காலகட்டத்தில் நிகர வட்டி வருமானம் 3,310 கோடியிலிருந்து ரூ.3,334 கோடியாக உயர்ந்துள்ளது. இந்த வருமானம் 2020–21 முழு நிதியாண்டில் 20% அதிகரித்து ரூ.15,666 கோடியானது.

கடந்த மார்ச் இறுதி நிலவரப்படி வழங்கப்பட்ட கடனில் மொத்த வாராக் கடன் விகிதம் 11.39%லிருந்து 9.85%ஆக குறைந்துள்ளது. அதே போன்று நிகர வாராக் கடனும் 4.19 %லிருந்து 3.37%ஆக சரிந்துள்ளது.

நான்காவது காலாண்டில் இடர்பாட்டிற்கான ஒதுக்கீடு முந்தை காலகட்டத்துடன் ஒப்பிடுகையில் ரூ.4,402 கோடியிலிருந்து ரூ.839 கோடியாக குறைந்துள்ளது.

கடந்த மார்ச் நிலவரப்படி வங்கி வழங்கிய கடன் 6% அதிகரித்து ரூ.3,90,317 கோடியாக உள்ளது. இது முந்தைய கால கட்டத்தில் ரூ.3,68,664 கோடியாக காணப்பட்டது. மொத்த டெபாசிட் ரூ.4,88,835 கோடியிலிருந்து 10% அதிகரித்து ரூ.5,38,071 கோடியாது என இந்தியன் வங்கி தெரிவித்துள்ளது.

மும்பை பங்கு சந்தையில் வெள்ளிக்கிழமை வர்த்தகத்தில் இந்தியன் வங்கின் விலை 1.13% அதிகரித்து ரூ.142.60 ஆக இருந்தது.

## 2020–21 நிதி ஆண்டின் 4வது காலாண்டில்

# கல்யாண் ஜூவல்லர்ஸ் நிறுவனத்தின் நிகர லாபம் ரூ.73.9 கோடி



சென்னை, மே.29

2020–21 நிதி ஆண்டின் 4வது காலாண்டில் கல்யாண் ஜூவல்லர்ஸ் நிறுவனத்தின் நிகர லாபம் ரூ.73.9 கோடியாகும்.

கடந்த மார்ச் மாதத்தோடு நிறைவடைந்த 2020–21 நிதி ஆண்டின் 4வது காலாண்டில் கல்யாண் ஜூவல்லர்ஸ் நிறுவனத்தின் மொத்த வருவாய் ரூ.3 ஆயிரத்து 56.6 கோடியாக உள்ளது. கடந்த ஆண்டு இதே காலக்கட்டத்தில் மொத்த வருவாய் ரூ.2 ஆயிரத்து 140.7 கோடியாக இருந்தது. 4வது காலாண்டின் நிகர லாபம் ரூ.73.9 கோடியாகும்.

இது கடந்த ஆண்டு இதே காலாண்டோடு ஒப்பிடுகையில் 54.1 சதவீதம் உயர்வு ஆகும். 2020–21 நிதி ஆண்டில் கல்யாண் ஜூவல்லர்ஸ் நிறுவனத்தின் மொத்த வருவாய் ரூ.8 ஆயிரத்து 573.3 கோடி ஆகும். இதே காலக்கட்டத்தில் கடந்த ஆண்டு மொத்த வருவாய் ரூ.10 ஆயிரத்து 100.9 கோடியாக இருந்தது. இது கடந்த ஆண்டோடு ஒப்பிடுகையில் 15.1 சதவீதம் குறைவு ஆகும்.

இதுகுறித்து கல்யாண் ஜூவல்லர்ஸ் நிறுவனத்தின் செயல் இயக்குனர் ரமேஷ் கல்யாணராமன் கூறியதாவது:

கடந்த ஆண்டு (2020–21) பல்வேறு வழிகளில் இதற்கு முன்பு இதுபோன்று ஒரு சூழலை சந்திக்காத வகையிலான ஒரு ஆண்டாக இருந்தது. 2020–21 நிதி ஆண்டின் தொடக்கத்தில் கொரோனா பெருந்தொற்றின் காரணமாக எங்களுடைய நகைக்கடைகள் அனைத்தையும் தற்காலிகமாக மூடவேண்டிய சூழ்நிலைக்கு தள்ளப்பட்டோம்.

வாடிக்கையாளர்களை சார்ந்த திட்ட நடவடிக்கைகள் மற்றும் எங்களுடைய ஊழியர்களின் கடினமான உழைப்பின் காரணமாக, அதற்கு பிந்தைய மாதங்களில் வலிமையான எழுச்சியை அடைந்திருக்கிறோம்.

இவ்வாறு அவர் கூறினார்.

# கொரோனா மருந்துகளுக்கு ஜிஎஸ்டி வரிவிலக்கு தேவை

**பழனிவேல் தியாகராஜன் வலியுறுத்தல்**

சென்னை, மே 29–

கொரோனா தடுப்பூசி மற்றும் மருந்துகளுக்கு ஜிஎஸ்டி வரி விலக்கு அளிக்கப்பட வேண்டும் ஜிஎஸ்டி கவுன்சில் கூட்டத்தில் தமிழக நிதி அமைச்சர் பழனிவேல் தியாகராஜன் வலியுறுத்தினார்.

டெல்லியில் மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் தலைமையில் காணொலி வாயிலாக 43 வது ஜிஎஸ்டி கவுன்சில் கூட்டம் நேற்று நடைபெற்றது.

சுமார் 8 மாதங்களுக்குப் பிறகு கூடிய ஜிஎஸ்டி கவுன்சில் கூட்டத்தில் கொரோனா சிகிச்சைக்குப் பயன்படுத்தப்படும் அத்தியாவசிய மருந்துகள், மருத்துவ உபகரணங்கள், தடுப்பூசிகள் மீதான வரி குறித்து விவாதிக்கப்பட்டது.

கூட்டத்தில் தமிழகத்தின் சார்பில் நிதித்துறை அமைச்சர் பி.டி.ஆர். பழனிவேல் தியாகராஜன் கலந்துகொண்டார்.

அப்போது அவர் பேசுகையில், கொரோனா தடுப்பூசிகள், ரெம்டெசிவர் மருந்துகளுக்கு ஜிஎஸ்டி வரியில் இருந்து விலக்கு அளிக்கப்பட வேண்டும் எனவும் மாற்றுத்திறனாளிகள் பயன்படுத்தும் உபகரணங்களுக்கு வரிவிலக்கு அளிக்கப்பட வேண்டும் வலியுறுத்தினார்.

மேலும் 2021–22ம் ஆண்டு மாநிலங்களுக்கு ஏற்படும் வருவாய் இழப்பை மத்திய அரசு ஈடு செய்ய வேண்டும் எனவும் மாநிலங்கள் இல்லாமல் மத்திய அரசு இல்லை என்பதை நினைவில் கொண்டு செயல்பட வேண்டும் எனவும் வலியுறுத்தினார்.

தொடர்ந்து பேசிய அவர் ஜிஎஸ்டி முறையை முழுவதுமாக மாற்றியமைப்பதற்கு முன்னுரிமை அளித்து மத்திய அரசு செயல்பட வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.

இந்த தொற்றுக் காலத்தில் வரி விகித உயர்வு என்பது பொதுமக்களை பெரிதும் பாதிக்கும் என்பதால், வரிவிகித பரிசீலனைக் குழுவின் ஜவுளி மற்றும் காலணிகள் மீதான தலைகீழ் வரிவிகித கட்டமைப்பின் திருத்தம் தொடர்பான பரிந்துரையை அடுத்த கூட்டம் வரை தள்ளிவைக்கலாம், எக்ஸ்ட்ரா நியூட்ரல் ஆல்கஹால் மீதான சரக்குகள் மற்றும் சேவைகள் வரி விதிப்பது குறித்து ஒருமித்த கருத்து எட்டாததால், அதை தள்ளிவைக்கலாம்.

இவ்வாறு அவர் பேசினார்.

# கரூர் வைஸ்யா வங்கி மொத்த வணிகம் ரூ.1,16,098 கோடி

**மேலாண்மை இயக்குனர் ரமேஷ்பாபு தகவல்**



சென்னை, மே.29–

கரூர் வைஸ்யா வங்கி ஆண்டு முடிவில் ரூ.1 லட்சத்து 16 ஆயிரத்து 98 கோடி மொத்த வணிகம் புரிந்துள்ளது என்று கரூர் வைஸ்யா வங்கி மேலாண்மை இயக்குனர் ரமேஷ்பாபு தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் மேலும் தெரிவித்துள்ளதாவது:

கரூர் வைஸ்யா வங்கி தனது ஆண்டு (12 மாதம்) மொத்த வணிகம் ரூ.1 லட்சத்து 16 ஆயிரத்து 98 கோடியை எட்டியுள்ளது.

வங்கியின் மொத்த டெபாசிட் ரூ.63 ஆயிரத்து 278 கோடியை அடைந்துள்ளது.

வங்கியின் நடப்பு, வைப்பு தொகை (காசா) ரூ. 21 ஆயிரத்து 654 கோடியை எட்டியுள்ளது.

கரூர் வைஸ்யா வங்கியால் வழங்கப்பட்ட கடன் தொகை ரூ.52 ஆயிரத்து 820 கோடியாகும். வங்கி வழங்கிய நகைக்கடன் ரூ.12 ஆயிரத்து 852 கோடியாகும்.

மொத்த வாராக் கடன் ரூ.4 ஆயிரத்து 143 கோடியாகும். வங்கி நிகர லாபம் ஆண்டின் முடிவில் ரூ.359 கோடியாகும். இது 52.76 சதவீத வளர்ச்சியாகும்.

வங்கியின் இயக்க லாபம் ரூ.1,429 கோடியாகும். வங்கியின் மொத்த வட்டி வருவாய் ரூ.2 ஆயிரத்து 360 கோடியாகும். வங்கியின் இதர வருவாய் ரூ. ஆயிரத்து 57 கோடியாகும்.

வங்கி 780 கிளைகளை கொண்டுள்ளது. 2 ஆயிரத்து 236 ஏடிஎம் மற்றும் பணம் போடும் யந்திரங்களை வங்கி கொண்டுள்ளது.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.


**லோட்டே இந்தியா கார்ப்பரேஷன் லிமிடெட்**

பதிவு அலுவலகம்: 4/111, மவுண்ட் பூந்தமல்லி ரோடு, மணப்பாக்கம், சென்னை–600 089.

Phone No.044-4545 8888 ; FAX : 044-4545 8800;

E-mail: compsecy@lotteindia.com, Website: www.lotteindia.com

Corporate Identity Number : U15419TN1954PLC001987

**அறிவிப்பு**

8 மார்ச், 2021 முதல் 7 மார்ச், 2024 வரை 3 வருட காலத்திற்கு திரு. Kyungwoon Cho, (இயக்குனர் அடையாள எண் 09048060) அவர்களை தலைவர் மற்றும் செயல் இயக்குனராக நியமனம் செய்வதற்கு மத்திய அரசின் ஒப்புதலை பெற விண்ணப்பம் ஒன்றை தாக்கல் செய்வதற்கு கம்பெனி திட்டமிட்டுள்ளது என்று கம்பெனிகள் சட்டம் 2013, பிரிவு 201 (2) (b)ன் கீழ் கம்பெனியின் உறுப்பினர்களுக்கு இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

மேற்கண்ட திட்டத்தில் எவருக்கேனும் ஆட்சேபம் இருப்பின் அவர்களின் ஆட்சேபத்தை ஆதாரத்துடன் எழுத்து மூலமாக செயலாளர், கம்பெனி விவகாரங்கள் துறை அமைச்சகம், A விங், சாஸ்திரி பவன் ராஜேந்திர பிரசாத் ரோடு, புதுடெல்லி – 110 001 அவர்களுக்கு இந்த அறிவிப்பு வெளியான 30 நாட்களுக்குள் அனுப்ப வேண்டும்.

லோட்டே இந்தியா கார்ப்பரேஷன் லிமிடெட்டுக்காக
T.G. கார்த்திகேயன்
கம்பெனி செயலாளர்

இடம்: சென்னை
தேதி: 28.05.2021



# MUNOTH COMMUNICATION LIMITED

Regd. Office : Suite No. 48 "MUNOTH CENTRE",
3rd Floor, 343, Triplicane High Road, Chennai 600 005. CIN : L65991TN1984PLC010816

## AUDITED FINANCIAL RESULTS FOR THE YEAR ENDED 31ST MARCH 2021

(Rs. In Lakhs)

| Sl. No. | Particulars | STANDALONE 3 months ended 31.03.2021 | 3 months ended 31.12.2020 | 3 months ended 31.03.2020 | Year ended 31.03.2021 | Year ended 31.03.2020 | CONSOLIDATED 3 months ended 31.03.2021 | 3 months ended 31.12.2020 | 3 months ended 31.03.2020 | Year ended 31.03.2021 | Year ended 31.03.2020 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | Audited | Unaudited | Audited | Audited | Audited | Audited | Unaudited | Audited | Audited | Audited |
| 1 | Total income from operations | 0.04 | 0.00 | 0.07 | 17.36 | 0.37 | 0.04 | 0.00 | 0.07 | 17.36 | 0.37 |
| 2 | Net Profit / Loss for the period (before Tax, Exceptional and / or Extraordinary items #) | (9.86) | (11.14) | (11.98) | (41.66) | (46.73) | (9.86) | (11.14) | (11.98) | (41.66) | (46.73) |
| 3 | Net Profit / Loss for the period before tax (after Tax, Exceptional and / or Extraordinary items #) | (9.86) | (11.14) | (11.98) | (41.66) | (46.73) | (9.86) | (11.14) | (11.98) | (41.66) | (46.73) |
| 4 | Net Profit / Loss for the period after tax (after Tax, Exceptional and / or Extraordinary items #) | (9.86) | (11.14) | (11.98) | (41.66) | (46.73) | (9.86) | (11.14) | (11.98) | (41.66) | (46.73) |
| 5 | Share of profit of associate accounted for using the equity method, if any, | 0.00 | 0.00 | 0.00 | 0.00 | 0.00 | 0.00 | 0.00 | (0.20) | (0.17) | (0.20) |
| 6 | Total Comprehensive Income for the period [comprising Profit / (Loss) for the period (after tax) and Other Comprehensiive Income (after tax )] | (21.27) | 18.45 | 8.38 | 34.80 | (35.87) | (21.27) | 18.45 | 8.18 | 34.63 | (36.06) |
| 7 | Equity Share Capital | 964.94 | 964.94 | 964.94 | 964.94 | 964.94 | 964.94 | 964.94 | 964.94 | 964.94 | 964.94 |
| 8 | Reserves (excluding Revaluation Reserve as shown in the Audited Balance sheet of previous year) | - | - | - | (562.23) | (520.56) | - | - | - | (553.71) | (511.87) |
| 9 | Earnings Per Share (Face value of Rs .10/-each) (not annualised) Basic & Diluted: | (0.10) | (0.12) | (0.12) | (0.43) | (0.48) | (0.10) | (0.12) | (0.13) | (0.43) | (0.49) |

Notes:

1. The above information has been extract from the detailed year ended annual audited financial results (both standalone and consolidated) for the year ended 31st March 2021 which have been reviewed by the Audit Committee, approved by the board of Directors in their meeting held on 28th May 2021, along with Independent Auditors Report issued by the the statutory auditors and filed with the Stock Exchanges under Regulation 33 of the SEBI (Listing Obligations and Disclosure Requirements) Regulations, 2015. The full format of the same are available on the Stock Exchange Website i.e. www.bseindia.com and on the company's website www.munothcommunication.com. The results include the consolidated unaudited financial results of the following company: Munoth communication and CFORE Telecom Limited.
2. The financial results have been prepared in accordance with the Companies (Indian Accounting Standards) Rules, 2015 (IND-AS) prescribed under section 133 of the companies act 2013 and other accounting principles generally accepted in India.
3. Figures for the previous period have been regrouped / rearranged wherever necessary.
4. Segment wise reporting is not applicable as the company operates in a single segment viz; selling and distribution of mobile phones and accessories.
5. The Profit and loss account statement includes the results of the Company for the quarter ended 31st March 2021 being the balancing figures between audited figures of the financial year and 9 months ended 31st Decembet 2020 which were subject to limited by the auditors.

for Munoth Communication Limited
**Jaswant Munoth**
Managing Director
(DIN No : 00769545)

Place : Chennai
Date : 28.05.2021



# SUNDARAM FINANCE

*Enduring values. New age thinking.*

## 31 மார்ச் 2021 அன்று முடிவடைந்த காலாண்டு மற்றும் ஆண்டுக்கான தணிக்கை செய்யப்பட்ட நிதிநிலை முடிவுகள்

(₹ கோடிகளில்)

| விவரங்கள் | தனித்தது: முடிவடைந்த காலாண்டு 31.03.2021 (தணிக்கை செய்யப்பட்டது) | 31.12.2020 (தணிக்கை செய்யப்படாதது) | 31.03.2020 (தணிக்கை செய்யப்பட்டது) | முடிவடைந்த ஆண்டு 31.03.2021 (தணிக்கை செய்யப்பட்டது) | 31.03.2020 (தணிக்கை செய்யப்பட்டது) | ஒருங்கிணைக்கப்பட்டது: முடிவடைந்த காலாண்டு 31.03.2021 (தணிக்கை செய்யப்பட்டது) | 31.12.2020 (தணிக்கை செய்யப்படாதது) | 31.03.2020 (தணிக்கை செய்யப்பட்டது) | முடிவடைந்த ஆண்டு 31.03.2021 (தணிக்கை செய்யப்பட்டது) | 31.03.2020 (தணிக்கை செய்யப்பட்டது) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| இயக்கங்களின் மூலம் மொத்த வருமானம் (நிகரம்) | 967.37 | 1044.96 | 941.92 | 3953.74 | 3842.09 | 1284.96 | 1391.99 | 1320.25 | 5247.66 | 4695.41 |
| லாபம் / (நஷ்டம்) (வழக்கம் இல்லாத அயிட்டம் மற்றும் வரிக்கு முன்னால்) | 263.32 | 320.16 | 165.57 | 1056.30 | 945.12 | 330.72 | 413.98 | 246.91 | 1329.57 | 999.56 |
| வழக்கம் இல்லாத அயிட்டம் | - | - | - | - | - | - | - | - | - | - |
| லாபம் / (நஷ்டம்) வரிக்கு முன்னால் (வழக்கம் இல்லாத அயிட்டத்துக்கு பிறகு) | 263.32 | 320.16 | 165.57 | 1056.30 | 945.12 | 330.72 | 413.98 | 246.91 | 1329.57 | 999.56 |
| நிகர லாபம் (வரி மற்றும் வழக்கமில்லா அயிட்டத்திற்குப் பிறகு (PAT)) கம்பெனி முதன்மை உரிமையாளருக்கானது | 209.20 | 242.18 | 130.90 | 809.05 | 723.95 | 270.50 | 342.27 | 195.64 | 1165.09 | 791.54 |
| நிகர லாபம் (வரி மற்றும் வழக்கமில்லா அயிட்டத்திற்குப் (PAT) பிறகு) மற்ற உரிமையாளருக்கானது | | | | | | 28.87 | 21.66 | 19.99 | 57.91 | 53.87 |
| நடப்புக் காலத்திற்கான மொத்த விரிவான வருமானம் (TCI) [நடப்புக் காலத்திற்கான வரிக்குப் பின் இலாபம் / (நஷ்டம்) (வரிக்குப் பின்) மற்றும் இதர விரிவான வருமானம்] (வரிக்குப் பின்) : | | | | | | | | | | |
| கம்பெனி உரிமையாளருக்கு காரணமானது | 208.13 | 240.68 | 135.54 | 804.22 | 787.12 | 275.73 | 390.70 | 209.66 | 1210.13 | 754.81 |
| மற்ற உரிமையாளருக்கானது | - | - | - | - | - | 239.97 | 96.88 | (70.75) | 191.33 | (354.01) |
| சமபங்கு மூலதனம் | 111.10 | 111.10 | 111.10 | 111.10 | 111.10 | 110.18 | 110.18 | 110.16 | 110.18 | 110.16 |
| ரிசர்வுகள் (மறுமதிப்பீடு ரிசர்வுகள் நீங்கலாக) | | | | 6068.35 | 5436.26 | | | | 7620.07 | 6566.66 |
| அடிப்படை மற்றும் டைல்யூட்டட் EPS அடிப்படை மற்றும் நீர்த்தது (முக மதிப்பு ₹10/-) (ஆண்டு விகிதம் செய்யப்படவில்லை) (on PAT) | 18.83 | 21.80 | 11.78 | 72.82 | 65.16 | 24.55 | 31.06 | 17.76 | 105.74 | 71.85 |

குறிப்புகள் :

1. மேற்கண்ட நிதிநிலை முடிவுகள், 2015ம் வருடத்தைய செக்யூரிட்டிஸ் அண்டு எக்சேஞ்சு போர்டு ஆஃப் இந்தியா (பட்டியல் கடமைகள் மற்றும் வெளிப்படுத்துதல் சம்பந்தமான நிபந்தனைகள்) விதிகளின், விதி 33ன் கீழ் ஸ்டாக் எக்சேஞ்சுகளுக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ள காலாண்டு / ஆண்டுக்கான நிதிநிலை முடிவுகளின் சுருக்கம் ஆகும். காலாண்டு / ஆண்டுக்கான நிதிநிலை முடிவுகளின் முழு விவரம் நேஷனல் ஸ்டாக் எக்ஸ்சேஞ்சின் இணையதளம் (www.nseindia.com) மற்றும் கம்பெனியின் இணையதளம் (www.sundaramfinance.in) ஆகியவற்றில் கிடைக்கும்.
2. மேற்கண்ட முடிவுகள் மே 28, 2021 அன்று நடைபெற்ற இயக்குநர்கள் குழு கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டது.
3. மார்ச் 31, 2020 அன்று முடிவடைந்த ஆண்டுக்கான வரிக்கு முந்தைய இலாபத்தில் சுந்தரம் பைனான்ஸ் ஹோல்டிங்க்ஸ் லிமிடெட் (SFHL)–ன் பங்குகளை விற்பனை செய்ததன் மூலம் கிடைத்த இலாபமான ரூ. 60.05 கோடிகள் அடங்கி உள்ளது. இதனால் நடப்பு ஆண்டுக்கான இலாபத்தை முந்தைய ஆண்டுடன் ஒப்பிட முடியாது.
4. இயக்குனர்கள் குழு இறுதி டிவிடெண்டாக ஒவ்வொரு பங்கிற்கும் ரூ.6 வீதம் (60%) 2020–21ம் ஆண்டுக்கு வழங்க பரிந்துரை செய்துள்ளது. இடைக்கால டிவிடெண்ட் ஒவ்வொரு பங்கிற்கும் ரூ.12 வீதம் (120%) ஏற்கனவே செலுத்தப்பட்டதை சேர்த்து மொத்த டிவிடெண்டாக ஒரு பங்குக்கு ரூ.18 வீதம் (180%) வழங்கப்படுகிறது.
5. கோவிட்–19 பெருந்தொற்று நோய் பரவல், காரணமாக இந்திய அரசு தேசிய அளவில் மார்ச் 2020 ஆண்டில் ஊரடங்கு அறிவித்தது. இதைத் தொடர்ந்து ஊரடங்கு தொற்று பரவல் கட்டுப்பாடுகள் அறிவித்த பகுதிகளுக்கு வெளியே படிப்படியாக விலக்கிக் கொள்ளப்பட்டது. அரசின் படிப்படியான கட்டுப்பாடுகளை தளர்வு செய்ததால் முதல் காலாண்டில், மொத்த ஊரடங்கு முதல் காலத்தில் இருந்ததால், மார்ச் 31, 2021ல் முடிவடைந்த நிதியாண்டில் வணிகம் குறைந்து இருந்தது. 2020–21ம் நிதியாண்டில் மூன்றாவது காலாண்டில் பொருளாதாரம் மீளுவதற்கான அறிகுறி தெரிந்தாலும், 2021 மார்ச் மாதம் முதல் 2வது தொற்று அலை துவங்கி, இந்தியாவில் இது கடுமையாகி, நாடு முழுவதும் பல மாநிலங்களில் அடுத்த கட்ட ஊரடங்கு அமல்படுத்தப்பட்டது. இதனால் ஏற்பட்ட தடைகள் நிறுவனத்தின் செயல்பாடு, நிதி நிலை முடிவுகள் ஆகியவை, தடுப்பூசி போடுதல், பாதுகாப்பு விதிகளை கடைப்பிடித்தல் மற்றும் புதிய உரு வைரஸ் / கடுமை அதிகமான வைரஸ் போன்றவை உருவாக வாய்ப்பு போன்றவை காரணமாக நிச்சயம் இல்லாமல் உள்ளது. கோவிட்–19 காரணமாக தீவிரமான பாதிப்பு ஏதும் ஏற்படவில்லை.

   ரிசர்வ் வங்கி 2020 மார்ச் 27ந் தேதி மற்றும், ஏப்ரல் 17, 2020 மற்றும் மே 23, 2020 ஆகிய தேதிகளில் அறிவித்த கோவிட்–19 வரைமுறை தொகை திட்டங்களுக்கு ஏற்ப, கம்பெனியானது, போர்டு அங்கீகார பாலிசிபடி மார்ச் 1, 2020 மற்றும் ஆகஸ்ட் 31, 2020 (நிவாரண காலம்) ஆகிய தேதிகளுக்கிடையே உள்ள காலத்தில் செலுத்தக்கூடிய தவணைத் தொகை செலுத்துவதில் நிவாரணத்தை தகுதியான கடன்தாரர்களுக்கு அறிவித்தது. நிவாரண பலன் வழங்கப்பட்ட கணக்குகள் விஷயத்தில், 2021 மார்ச் 31ல் அந்த கணக்குகளின் நிலையானது, முந்தைய கடன் பாக்கி தேதி நிலவரப்படி நிவாரண காலம் வழங்குவது, ரிசர்வ் வங்கி அதற்கு மேலே குறிப்பிட்ட அறிவிக்கையில் குறிப்பிட்டபடிக்கு ஏற்ப இருக்கும்.

   தவணை செலுத்துவதில் அளிக்கப்பட்ட சலுகையினால் மட்டுமே வாடிக்கையாளர்களிடமிருந்து நிறுவனம் கடனை திரும்பப் பெறுவதில் உள்ள அபாயத்தின் நிலைமை குறிப்பிட்ட அளவிற்குமேல் அதிகரிக்க வாய்ப்பில்லை என்றாலும், நலிவுற்ற மொத்த பொருளாதாரத்தின் காரணமாக ஏற்படும் நிச்சயமற்ற நிலைமையை கருத்தில் கொண்டு நிறுவனம், உத்தேசமான மதிப்பீட்டின் அடிப்படையில் கடனை திரும்பப் பெறுவதில் ஏற்படக்கூடிய இழப்பை ஒதுக்கீடு செய்துள்ளது. கடந்த சில மாதங்களில் அரசாங்கம் படிப்படியாக ஏற்படுத்திய கட்டுப்பாடு தளர்வுகளால் பொருளாதாரத்தில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டாலும், முதல் காலாண்டில் இருந்த முழு ஊரடங்கின் காரணமாக, 31 மார்ச் 2021ல் முடிவடைந்த காலாண்டு மற்றும் ஆண்டுக்கான வியாபாரம் மிகவும் குறைந்து விட்டது. இதற்கேற்ப நிர்வாகம் தொடர்ந்து ஏற்பட்டு வரும் நிலையை துல்லியமாக கண்காணித்து நிதிநிலை அறிக்கையில் தற்போதைய நிலை வரைக்கும் உள்ளவற்றை கருத்தில் கொண்டு, 2021 மார்ச் 31ந் தேதி அன்று எதிர்பார்க்கும் கடன் நஷ்டம் (ECL) ஒதுக்கீடு பற்றியும் தீர்மானித்துள்ளது. 2021 மார்ச் 31ல் முடிவடைந்த நிதியாண்டில் கம்பெனியானது ECL ஒதுக்கீடுகளுக்கு போதிய அளவு ஒதுக்கி உள்ளது. 2020 மார்ச் 31ல் கோவிட் 19 ரிசர்வ் தொகை ரூ.59.65 கோடி ஒதுக்கப்பட்டு, அது ரிவர்ஸ் செய்யப்பட்டு நிறுத்தி வைக்கப்பட்ட வருவாய்க்கு மாற்றப்பட்டது.
6. அக்டோபர் 23, 2020 தேதியிட்ட இந்திய அரசின் அறிவிப்பின்படி கோவிட்–19ன் நிவாரணத் திட்டத்தை கம்பெனி அமல்படுத்தி தகுதிபெற்ற கடன்தாரர்களுக்கு அவரவர் கணக்கில் ஊக்கத் தொகையை வரவு வைக்கப்பட்டது / செலுத்தப்பட்டது.
7. மார்ச் 31, 2020 அன்று முந்தைய ஆண்டில், சுந்தரம் பண்ட் சர்வீசஸ் லிமிடெட் (முன்னர் சுந்தரம் பிஎன்பி பரிபாஸ் ஃபண்ட் சர்வீசஸ் லிமிடெட்)டின் 49% பங்குகளையும் மற்றும், சுந்தரம் ஹோம் பைனான்ஸ் லிமிடெட் (முன்னர் சுந்தரம் பிஎன்பி பரிபாஸ் ஹோம் பைனான்ஸ் லிமிடெட்)டின் 49.9% பங்குகளையும் முறையே ஜூலை 31, 2019 மற்றும் செப்டம்பர் 30, 2019 தேதிகளில் நிறுவனம் வாங்கியதன்மூலம் அவையாவும் கம்பெனியின் 100% துணை நிறுவனங்களாக மாறின.
8. மார்ச் 31, 2021 மற்றும் மார்ச் 31, 2020 அன்று முடிவடைந்த காலாண்டிற்கான தொகைகள் முந்தைய அந்தந்த நிதியாண்டு மற்றும் வெளியிடப்பட்ட மூன்றாம் காலாண்டிற்கான தொகைகளுடன் சமன் செய்து வழங்கப்பட்டுள்ளன.
9. முந்தைய காலத்திற்கான தொகைகள் நடப்புக் காலத்தின் தேவைக்கேற்றவாறு மறுவரிசைப்படுத்தப்பட்டுள்ளது.
10. மார்ச் 31, 2021 அன்று முடிவடைந்த காலாண்டு மற்றும் ஆண்டிற்கான நிதிநிலை முடிவுகள் சட்டமுறை தணிக்கையாளர்களால் வரையறைக்குட்பட்ட மறுபரிசீலனை செய்யப்பட்டன.

போர்டின் உத்தரவுப்படி
ராஜீவ் C லோச்சன்
நிர்வாக இயக்குநர்

சென்னை
28.05.2021

**சுந்தரம் பைனான்ஸ் லிமிடெட்**

CIN:L65191TN1954PLC002429

பதிவு பெற்ற அலுவலகம் : 21, பட்டுல்லாஸ் சாலை, சென்னை - 600 002. Tel: 044 2852 1181, Fax: 044 2858 6641

Email: investorservices@sundaramfinance.in www.sundaramfinance.in